அன்புக் குழந்தைகளே,

பூஞ்சிட்டு - இது உங்களைப் போன்ற குட்டி மனிதர்களுக்காகவே விசேஷமாய்த் தயாரிக்கப்பட்ட மாத இதழ். உல்லாசமான பொழுதுபோக்கு அம்சங்களோடு உங்கள் கையில் தவழும் இந்தச் சின்னச் சிட்டு உங்கள் அனைவருக்கும் பிடித்திருக்கிறதல்லவா? பூஞ்சிட்டு மூலம் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தலாம்; உங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்; நம் தாய்மொழியாம் செந்தமிழின் சுவை அறியலாம்.

பல குழந்தைகள் இந்த இதழைத் தயாரிப்பதில் பங்கெடுத்திருக்கிறார்கள் - கட்டுரைகள் எழுதி இருக்கிறார்கள், படம் வரைந்திருக்கிறார்கள், புதிர் தயாரித்திருக்கிறார்கள். இந்தக் குழந்தைகளுடைய திறமையையும் ஆற்றலையும் கண்டு மிகுந்த ஆச்சர்யமும் உற்சாகமும் அடைகிறோம். இதழ் தயாரிப்பில் பங்குபெற்ற அனைவருக்கும் சின்னச் சின்னப் பரிசுகளை வீடு தேடிச் சென்று அளித்திருக்கிறது பூஞ்சிட்டு. உங்களுக்கும் பங்கேற்க ஆவல் எழுந்திருக்குமல்லவா? அடுத்த இதழில் கண்டிப்பாக இணைந்து கொள்ளுங்கள். உங்கள் படைப்புகள் பிரசுரமாவதோடு பரிசும் கிட்டும் இரட்டைச் சந்தோஷத்தை தவற விடாதீர்கள். சரிதானே?

பூஞ்சிட்டு பற்றிய உங்கள் கருத்துக்களை எங்களுக்குத் தெரியப்படுத்தினால்தான் உங்களுக்குப் பிடித்தவண்ணம் இதழை அலங்கரிக்க முடியும். செய்வீர்களா?

மிகுந்த பாசத்துடன்,
நிலா ஆன்டி

## Dear Children,

Poonchittu is a monthly newsletter designed specifically for young children like You. Intended mainly to make your dreams come true and quench your thirst, it is filled with all recreational features. You can display your skills, widen your knowledge and taste the flavour of our mother tongue Tamil through this monthly magazine .

Many children have enthusiastically contributed essays, poems, articles, riddles, paintings etc., for this magazine. we are amazed and elated at seeing the budding talents. Small gifts have been sent to all children who have contributed to poonchittu. Little masters!! Do you feel like participating? If so you can do in our next forthcoming issues. Make use of this opportunity and get the double gift of seeing your articles in the magazine as well as getting gifts!

Poonchittu can be designed to suit your demands, needs and expectations only if you constantly give us your comments and suggestions. Will you young masters do so?

With lots of love
Nila Aunty

Editor: Nirmala Raju Sub-Editor: Suganthi Venkatesh

Please send in your comments and contributions to:
Poonchittu, 4 Ellson Close, Crawley, RH10 7UD, UK 01293 888 447, chittu@nilacharal.com (Or)
South London Tamil Welfare, 65 Clarendon Road, Collierswood, London, SW19 2DX, UK

UnLtd*